**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075289

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)
**Under Section 173 BNSS**

C

1. District : மாவட்டம் புதுக்கோட்டை  PS: காவல்நிலையம் ஊழல்  Year: ஆண்டு  FIR No.: மு.த.அ. எண் 03/2024  Date: நாள் 23.07.2024

2. (i) Act சட்டம்: தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,  Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தப்பட்டது 2018)  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 02.07.2024  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 16.07.2024, 19.07.2024  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.07.2024  Time : நேரம் 18.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ மேற்கே
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி R. பாலகுறிச்சி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ம. ராஜமோகன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A.L. மணி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1978  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் -  Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி எண். 449, அம்மன் கோவில் தெரு, R. பாலகுறிச்சி & அஞ்சல், பொன்னமராவதி (வட்), புதுக்கோட்டை மா.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   கே. அய்யனாறு, கிராம நிர்வாக அலுவலர், R. பாலகுறிச்சி, பொன்னமராவதி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியின் இருப்பிடத்தின் மற்றும் எதிரியின் நடத்தையின் மீது ரகசிய விசாரணை செய்ததால்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 23/7/2024

Signature of the Officer Incharge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23-07-2024

Name: பெயர் [illegible]
Rank: நிலை ........................ No. எண் ..........

காவல் ஆய்வாளர், [illegible]

## Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.03/2024

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 22.07.2024–ஆம் தேதி மாலை 18.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது M.சிவகுமார், த/பெ A.L.மணி, எண்.449, அம்மன்தெரு, R பாலக்குறிச்சி & அஞ்சல், பொன்னமராவதி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கணினியில் டைப் செய்த ஒரு புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர்– M.சிவகுமார், த/பெ A.L.மணி, எண்.449, அம்மன்தெரு, R பாலக்குறிச்சி & அஞ்சல், பொன்னமராவதி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். பெறுநர்– காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, புதுக்கோட்டை. அய்யா, நான் R பாலக்குறிச்சியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.சண்முகம் பிள்ளை மகன் துரைச்சாமிக்கு சொந்தமான சர்வே எண்.204.1சி1பி–க்கு உட்பட்ட 29 ½ செண்ட் நிலத்திலிருந்து, எனது மைத்துனர் திரு.பாலாஜியின் மனைவி நித்யா என்பவர் 9 செண்ட் நிலமும், எனது உறவின் முறை அண்ணன் விஸ்வநாதன் என்பவரின் மனைவி திருமதி.கவிதா என்பவர் 7 செண்ட் நிலமும் வாங்கினார்கள். கடந்த 22.05.2024–ஆம் தேதி அவற்றை பொன்னமராவதி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1882/2024 மற்றும் 1883/2024–ன்படி பதிவு செய்தோம். இதுபோல கட்டுக்குடிப்பட்டியைச் சேர்ந்த எனது நண்பர் திரு.தவசீலன் மற்றும் அவரது அக்கா மகன் ஜெயசூர்யா ஆகியோரும் 10 மற்றும் 9 செண்ட்டுகள் நிலங்களை துரைச்சாமியிடமிருந்து வாங்கினார்கள். அதன்பிறகு கடந்த 27.06.2024ம் தேதி எனது மைத்துனர் பாலாஜி கோவையிலிருந்து எனக்கு போன் செய்து, R பாலக்குறிச்சி VAO திரு.அப்பாத்துரை என்பவர் கடந்த 24.06.2024ம் தேதி பாலாஜிக்கு போன் செய்து அவரது மனைவி நித்யா மற்றும் உறவினர் கவிதா ஆகியோர் பெயரில் வாங்கிய நிலத்திற்கான பட்டா மாறுதல் விண்ணப்பங்களை ரத்து செய்ய போவதாகவும் உரிய ஆவணங்களை எடுத்துக்கொண்டு மறுநாளே வந்து VAOவை பார்க்கும்படி சொன்னதாகவும், ஆனால் பாலாஜி அவ்வாறு செய்யவில்லை என்றும், அதனால் கடந்த 26.06.2024ம் தேதி பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக குறுந்தகவல் வந்துள்ளதாக என்னிடம் சொன்னார். மேலும் என்னை, VAO அப்பாத்துரை

என்பவரை சந்தித்து பட்டா மாறுதல் சம்மந்தமாக விசாரிக்கும்படி பாலாஜி சொன்னார். பாலாஜி கோயாம்புத்தூரில் ஹோட்டல் நடத்தி வருவதாலும், எனது உறவினர் கவிதா புதுக்கோட்டையில் வசித்து வருவதாலும், எங்கள் ஊரில் ஏதாவது வேலை என்றால் என்னிடம் செய்து கொடுக்கும்படி சொல்வார்கள். நானும் செய்து கொடுப்பேன். அதுபோல கவிதாவும் பட்டா மாறுதல் சம்மந்தமாக என்னை பார்த்துக்கொள்ளும்படி சொன்னார். மேலும் எனது நண்பர் தவசீலன் 01.07.2024ம் தேதி என்னை சந்தித்து தனக்கும், தனது அக்கா மகன் ஜெயசூர்யாவிற்கும் பட்டா மாறுதல் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அப்போது நான், எனது மைத்துனர் மனைவி நித்யா மற்றும் உறவினர் கவிதா ஆகியோருக்கு பட்டா மாறுதல் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவரிடம் தெரிவித்தேன். மேலும் பட்டா மாறுதல் சம்மந்தமாக VAO அப்பாத்துரையை பார்க்க வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் பட்டா மாறுதல் சம்மந்தமாக அவருக்கும் சேர்த்து பார்க்கும்படி கூறினார். அதன்பிறகு நான் கடந்த 02.07.2024—ஆம் தேதி VAO அப்பாத்துரையை R பாலக்குறிச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து பட்டா மாறுதல் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நான்கு பேருக்கும் மூலப்பத்திரம் கிடைக்கப்பெறாததால் பாட்டா மாறுதல் விண்ணப்பங்களை ரத்து செய்யப்பட்டதாக கூறினார். நான் அவரிடம் மூலப்பத்திரம், நான்கு பேர்களின் பத்திர நகல்களை VAOவிடம் கொடுத்தேன். மேலும், நான்கு இடங்களுக்கும் பட்டா மாறுதலுக்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் பட்டா மாறுதலுக்கான நடைமுறைகள் அனைத்தையும் VAO திரு.அப்பாத்துரையே செய்து முடித்து, பட்டா மாறுதல் உத்தரவுகளை வாங்கி தருவதாகவும் சொன்னார். அதற்கு ஒரு பட்டா மாறுதலுக்கு ரூ.5,000/— வீதம் நான்கு பட்டா மாறுதல்களுக்கும் ரூ.20,000/— உடனே கொடுக்க வேண்டும் என்றும், மீதித்தொகை எவ்வளவு என்று பின்னால் சொல்வதாகவும், அப்போது அந்த தொகையை கொடுங்கள் என்றும் சொன்னார். நான் சம்மந்தப்பட்டவர்களிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்விட்டு வந்துவிட்டேன். இந்த விபரத்தை நான் சம்மந்தப்பட்டவர்களிடம் சொன்னேன், அப்போது அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அதன்பிறகு கடந்த 16.07.2024ம் தேதி தனது மைத்துனர் பாலாஜி எனக்கு போன் செய்து, VAO அப்பாத்துரை பட்டா மாறுதல்களுக்கு முன்பணமாக ரூ.10,000/—த்தை உடனே கொடுத்தால்தான் பட்டா மாறுதல்களுக்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவு செய்வேன் என்று போன் செய்து சொன்னதாகவும், அதனால் பட்டா மாறுதல் சம்மந்தமாக VAOவை பார்க்கும்படி கூறினார். நான் பட்டா மாறுதலுக்கு VAO பணம் கேட்ட விபரத்தை தவசீலனிடம் சொன்னேன், அதற்கு அவர் பட்டா மாறுதல்களை பிறகு பார்த்துக்கொள்கிறேன்

என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு நான் கடந்த 16.07.2024ம் தேதி VAO அப்பாத்துரையை அவரது அலுவலகத்தில சந்தித்து நித்யா மற்றும் கவிதா ஆகியோர்களது பட்டா மாறுதல் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் இன்னும் இரண்டு இடத்திற்கான பட்டா மாறுதல் விண்ணப்பிக்க வேண்டாமா என்று கேட்டார். அதற்கு நான் வேண்டாம், நான் சொன்ன இரண்டு பேருக்கு மட்டும் பட்டா மாறுதல்கள் செய்து கொடுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் ஒரு இடத்திற்கு பட்டா மாறுதல் செய்து உத்தரவு பெற்று கொடுப்பதற்கு ரூ.25,000/– வீதம் இரண்டு இடங்களுக்கு மொத்தம் ரூ.50,000/– கொடுக்க வேண்டும் என்று சொன்னார். மேலும் முன் தொகையாக ரூ.10,000/–த்தை மறுநாள் 17.07.2024ம் தேதி கொடுக்கும்படி சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். ஆனால் நான் 17.07.2024–ம் தேதி குடும்பத்துடன் சாமி கும்பிட அழகர் கோவிலுக்கு சென்று, அன்று மாலை வீட்டிற்கு திரும்பினேன். அப்போது பாலாஜி எனக்கு போன் செய்து VAO அப்பாத்துரை தனக்கு போன் செய்து பணம் கேட்டதாகவும், தனக்கு லஞ்சமாக பணம் கொடுத்து பட்டா மாறுதல் பெற விருப்பம் இல்லை என்றும், நேர்மையான முறையில் பட்டா மாறுதல் பெற VAOவை பார்க்கும்படி என்னிடம் கூறினார். கவிதாவிடம் கேட்டேன், அவரும் பாலாஜி சொன்னது போலவே சொன்னார். அதனால் நான் கடந்த 18.07.2024–ஆம் தேதி VAO அப்பாத்துரைக்கு போன் செய்தேன். அவர் அய்யாப்பட்டி விளக்கில் இருப்பதாகவும், அங்கு வந்து தன்னை பார்க்குமாறும் சொன்னார், அதன்படி நான் அங்கு சென்று அவரை சந்தித்தேன். அப்பொழுது VAO அப்பாத்துரை பட்டா மாறுதல் சம்மந்தமான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தன்னிடம் தான் இருக்கு என்றும், உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்யவேண்டி இருப்பதால் அவரே சர்வேயரை அழைத்து உட்பிரிவு செய்து, அதற்காக சர்வேயருக்கும் தானே பணம் கொடுத்து, பட்டா மாறுதல்களுக்கான அனைத்து வேலைகளும் செய்து முடித்து, பட்டா மாறுதல் உத்தரவு வாங்கி கொடுப்பதற்கு தான் ஏற்கனவே கேட்ட ரூ.50,000/–த்தை மொத்தமாக கொடுக்கும்படி கூறினார். நான் அதற்கு நான் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் உடனே தரவேண்டாம் வருகின்ற செவ்வாய்கிழமை (23.07.2024ம் தேதி) ரூ.50,000/–த்தையும் மொத்தமாக கொடுக்கும்படி வற்புறுத்திக் கேட்டார். நான் சரி என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். ஆனால் எனது மைத்துனர் பாலாஜிக்கும், அவரது மனைவி நித்யாவுக்கும், உறவினர் கவிதாவுக்கும், எனக்கும் லஞ்சமாக பணம் கொடுத்து பட்டா மாறுதல் பெற விருப்பம் இல்லை. ஆகவே சம்மந்தப்பட்ட மற்றவர்களின் ஒப்புதலோடு எங்களிடம் பட்டா மாறுதலுக்கு ஏற்பாடு செய்து, பட்டா மாறுதல் உத்தரவு வாங்கி தருவதாக கூறி அதற்காக ரூ.50,000/– லஞ்சமாக

பணம் கேட்ட VAO அப்பாத்துரை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி 22.07.2024ம் தேதி மாலை 6.30 மணிக்கு கணினி மூலம் தயார் செய்த புகார் மனுவை புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து தங்களிடம் கொடுத்தேன். இப்படிக்கு (ஒப்பம்) M.சிவகுமார், 22.07.2024

Sir, Received the above computer typed complaint on 22.07.2024 at 18.30 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.03/2024 u/s 7 (a) of Prevention of Corruption Amendment Act-2018 at 06.00 hrs today on 23.07.2024 and took up for investigation. (Sd-) A.Peter, Inspector of Police, /V&AC/PK.

Original FIR along with Original Computer typed complaint of Tr.M.Sivakumar, S/o A.L.Mani, No.449, Amman Street, R Palakurichi, Ponnamaravathi Taluk, Pudukkottai District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge for trial of case under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

23.07.2024
(A. PETER)
Inspector of police,
Vigilance and Anti-Corruption,
Pudukkottai